# சொல்:

சொல் என்பது ஒரெழுத்தாலோ, பலவெழுத்துக்களாலோ ஆக்கப்பட்டு ஒரு *பொருளைத் தரும்* மொழிக்கூறு. சொல்லைக் *கிளவி*, **பதம்** என்றும் கூறுவது உண்டு.

## சொல் வகைகள்

பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்

### *பெயர்ச்சொல்*

பெயர்ச்சொல் என்பது ஒன்றன் பெயரை உணர்த்தும் சொல் ஆகும். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறின் அடிப்படையில் பெயர்ச்சொற்கள் தோன்றும்.

1. பொருட் பெயர்
2. இடப் பெயர்
3. காலப் பெயர்
4. சினைப் பெயர்
5. பண்புப் பெயர்
6. தொழிற் பெயர்

என்று ஆறு வகைப்படும்.

**எடுத்துக்காட்டுகள்**

பொருட்பெயர் : , பசு, புத்தகம் இடப்பெயர் : தஞ்சாவூர் , தமிழகம் காலப்பெயர் : மணி, ஆண்டு , நாள் சினைப்பெயர் : கண், காது ,கை, தலை பண்புப்பெயர் : இனிமை, நீலம், நீளம், சதுரம் தொழிற்பெயர் : படித்தல், உண்ணுதல் , உறங்குதல்

### *வினைச்சொல்*

தொழிலின் காலம் காட்டும் சொல் வினைச்சொல்

வினைச்சொல் என்பது ஒரு பொருளின் வினையை உணர்த்துவதாகும். முடிவு பெற்ற வினைச்சொல் முற்று எனப்படும். முடிவு பெறாத வினைசொல் எச்சம் எனப்படும்

**முற்று**

**1. தெரிநிலை வினைமுற்று**

செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்னும் ஆறையும் உணர்த்துவது தெரிநிலை வினைமுற்று ஆகும்

எ.கா: கவிதா மாலை தொடுத்தாள்

**2.குறிப்பு வினைமுற்று**

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறின் அடிப்படையில் தோன்றி, செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்னும் ஆறினுள் செய்பவனை மட்டும் விளக்குவது குறிப்பு வினைமுற்று ஆகும்.

எ.கா: அவன் ராஜா

**எச்சம்**

**1.பெயரெச்சம்**

பெயரெச்சம் என்பது, பெயரைக் கொண்டு முடிவுறும் காலங்காட்டுகின்ற, முற்றுபெறா வினைச் சொற்கள் ஆகும். பெயரெச்சம் தெரிநிலை பெயரெச்சம், குறிப்புப் பெயரெச்சம் என் இருவகைப்படும்.

எ.கா: படித்த பையன்

**2.வினையெச்சம்**

வினையெச்சம் என்பது வினை முற்றினை கொண்டு முடிவுறும் காலங்காட்டுகின்ற, முற்றுபெறா வினைச்சொற்கள் ஆகும. வினையெச்சம் தெரிநிலை வினையெச்சம் , குறிப்புப் வினையெச்சம் என் இருவகைப்படும்.

எ.கா: படித்துத் தேறினான்

## **இடைச்சொல்**:

பெயர்ச்சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் இடைநிற்பது இடைச்சொல்

மரத்தை = மரம் *அத்து ஐ*, படித்தனள் = படி *த் அன் அள்* இடைச்சொல்

இடைச்சொல் என்பது தனித்து நில்லாமல் பெயரையோ வினையையோ சார்ந்து வருவது.

எ.கா: சேரனும் சோழனும் பாண்டியனும் வந்தனர்

## உரிச்சொல்

உரிச்சொல் என்பது பல்வேறு வகைப்பட்ட பண்புகளையும், குணங்களையும், வடிவங்களையும் உணர்த்தும் சொல்லாகும்.

பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் விட்டு நீங்காதனவாய் வரும்.